# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## பால்நிலைசார் சமத்துவம்

**பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் மீதான தேசிய கொள்கையினை வகுத்தமைப்பதற்கும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கும்; பால்நிலைசார் நோக்குநரை நியமிப்பதற்கு அல்லது பெயர் குறிப்பதற்கும்; வேறுபட்ட பால்நிலைசார் அடையாளங்களைக் கொண்ட ஆட்களின் பால்நிலைசார் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர் அவர்களால் 2024, மே மாதம் 09 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, ஏப்பிறல் மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[**256 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 48.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ச.வ.ஓ. 43 /2023

**பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் மீதான தேசிய கொள்கையினை வகுத்தமைப்பதற்கும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கும்; பால்நிலைசார் நோக்குநரை நியமிப்பதற்கு அல்லது பெயர் குறிப்ப தற்கும்; வேறுபட்ட பால்நிலைசார் அடையாளங்களைக் கொண்ட ஆட்களின் பால்நிலைசார் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளைச் செய்வ தற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

முன்னுரை

சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்; அத்துடன் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் அத்துடன் இனம், மதம், மொழி, சாதி, பால் அரசியற் கொள்கை பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் ஓரங்காட்டுதலின்றி, எல்லா உரிமைகளிற்கும் சுதந்திரத்திற்கும் உரித்துடையவர்கள் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு ஏற்றங்கீகரிக் கின்றதாதலாலும்;

அத்துடன் பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் மீதான தேசிய கொள்கையில் பால் அல்லது பால்நிலைசார் அடையாளம் பற்றிய வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் ஆட்கள் எல்லோருக்கும் அரசானது சமமான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்துகின்றதாதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புசார், பால்நிலைசார் வேறுபாட்டை நீக்குவதில் பெண்களின் முன்னேற்றத்திற்காக சட்டத்தினால், துணைநிலை சட்டத்தினால் அல்லது நிறைவேற்று நடவடிக்கையினால் செய்யப்படவுள்ள விசேட ஏற்பாடுகளையும் ஏற்றங்கீகரிக்கின்றதாதலாலும்;

ஆகவே, இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பால்நிலைசார் சமத்துவச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவானது எந்த தேதியன்று சட்டமூலம் பாராளுமன்ற சட்டமாக வருகின்றதோ அந்த தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

சட்டத்தின் குறிக்கோள்கள்

**2.** இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் -

(அ) சமூக, பொருளாதார, அரசியல், கலாசார தொழில்நுட்ப கொள்கைகளை ஆக்குவதில் பால்நிலைசார் சமத்துவ கோட்பாடுகளை தாபித்தல் மற்றும் அதற்கு வசதியளித்தல்;

(ஆ) அரசியலமைப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றை பால் அல்லது பால்நிலைசார் அடையாளம் என்பவற்றின்மீது அடிப்படையாகக் கொண்டு ஓரங்காட்டுதலின்றி ஒவ்வொரு ஆளும் அனுபவிக்கின்றனர் என்பதனை உறுதிசெய்தல்;

(இ) வெவ்வேறு பால்நிலைசார் அடையாளங்களை ஆட்களிற்கு கொள்கையில், நிகழ்ச்சித்திட்டங்களில் மற்றும் சேவைகளை வழங்குவதில் நேரடியான ஓரங்காட்டுகை மற்றும் நேரடியாகவல்லாத ஓரங்காட்டுகை பல்லின மற்றும் பிரிவுகளுக்கிடையேயான ஓரங்காட்டுகை, உட்பட பால்நிலைசார் சமத்துவமின்மை மற்றும் பாலியல் அடிப்படையிலான ஓரங்காட்டுதலின் முறைமையான மற்றும் கட்டமைப்பு

ரீதியான காரணங்களை அடையாளங்கண்டு நீக்குவதற்கு வசதியளித்தல்;

(ஈ) பிரதிகூலங்கள், வலிமையற்றதாக்குகை, பாலினவேறுபாடு, களங்கம், வகுதிப்படுத்தல், மாறா மரபுமுறை, பங்கம் மற்றும் மீறுகை என்பவற்றை நிவர்த்திசெய்வதற்கும் மற்றும் கட்டமைப்புகள்சார் மாற்றத்தினூடாக ஆண்கள், பெண்கள் மற்றும் வேறுபட்ட பால்நிலைசார் அடையாளங்களையும் ஆட்களையும் இணங்கிச்செல்வதற்குமான வழிமுறைகளை எடுத்தல்;

(உ) பால் அல்லது பால்நிலைசார் அடையாளம் என்பவற்றைப் பொருட்படுத்தாமல் மனித கௌரவத்தைப் பாதுகாத்தல்;

(ஊ) சமமான சந்தர்ப்பங்களையும் மற்றும் பால்நிலைசார் சமத்துவம் பற்றிய பெறுபேறுகளை எய்துவதற்கு இயலச்செய்கின்ற சூழலையும் ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(எ) பால்நிலைசார் சமத்துவக் கோட்பாடுகளை தாபித்தலும் பகிரங்க நிறுவனங்கள், வியாபாரங்கள், சிவில் சமூக ஒழுங்கமைப்புகள், தொழில் மற்றும் வேறு சட்ட உருவகங்கள் மற்றும் தனியாட்கள் பற்றிய நடத்தையில் அத்தகைய கோட்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தல்.

பால்நிலைசார் சமத்துவத்தைப் பாதுகாத்தலும் முன்னேற்றுதலும்

**3.** ஆள் ஒவ்வொருவரும் பால்நிலைசார் சமத்துவத்திற்கான உரிமையை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் எவரேனுமாளுக்கு அத்தகைய உரிமம் மறுக்கப்படலாகாது.

இச்சட்டத்தின் நடைமுறைப் படுத்தலை உறுதிசெய்வதில் அமைச்சருக்குள்ள தத்துவம்

**4.** (1) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காகவும், அமைச்சர் பின்வருவனவற்றுக்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும்-

(அ) பிரிவு 5 இன்கீழ் தாபிக்கப்பட்ட பால்நிலைசார் சமத்துவப் பேரவையின் கலந்தாலோசனையுடன் (இதனகத்துப்பின்னர் ''கட்டுக்கோப்பு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பால்நிலைசார் சமத்துவத்துக்கு வசதியளிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்குமான கட்டுக்கோப்பு ஒன்றை விதித்துரைத்தல்;

(ஆ) பகிரங்க நிறுவனங்களினாலும் மற்றும் தனியார் நிறுவனங்களினாலும் பொறுப்பேற்கப்பட்ட திட்டங்கள் மற்றும் வழிமுறைகள் உட்பட கட்டுக்கோப்பின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான, வழிகாட்டுநெறிகளை ஒழுங்குவிதிகள் என்றவகையாக, வழங்குதல்;

(இ) கட்டுக்கோப்பை நடைமுறைப்படுத்துவதற்காக பகிரங்க நிறுவனங்களினாலும் மற்றும் தனியார் நிறுவனங்களினாலும் ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் வழிமுறைகள் பற்றிய தகவலை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் நாளதுவரையாக்கல்;

(ஈ) பந்திகள் (ஆ) மற்றும் (இ) இல் தரப்பட்ட கருமங்கள் தொடர்பில் நாளதுவரையாக்கல்களையும் அறிக்கைகளையும் கோருதல் மற்றும் பகிரங்க நிறுவனங்களினாலும் மற்றும் தனியார் நிறுவனங்களினால் கட்டுக்கோப்புடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் நடவடிக்கைமுறைகள் மற்றும் வழிமுறைகளை குறித்துரைத்தல்;

(உ) பகிரங்க நிறுவனங்களினதும் மற்றும் தனியார் நிறுவனங்களினதும் நிருவாக நடவடிக்கைமுறைகள் மற்றும் செயல்முறைகள் பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் மீதான தேசிய கொள்கையின்படி பால்நிலைசார் சமத்துவம் பற்றிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகள் மற்றும் நியமங்களுக்கு இணங்க உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு கிரமமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை நடைமுறைப்படுத்தல்;

(ஊ) பால்நிலைசார் சமத்துவத்தை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மற்றும் பலப்படுத்துவதற்குமான வழிமுறைகளையும் பொறிமுறைகளையும் விதித் துரைத்தல்;

(எ) பால்நிலைசார் அடிப்படையிலான மீறுகை மற்றும் ஓரங்கட்டுகைக்கான பரிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வேறுபட்ட பால்நிலைசார் அடை யாளங்களை கொண்ட ஆட்களுக்கு உதவுவதற்கான ஆதரவு முறைமையினை தாபிக்கின்ற முறையை விதித்துரைத்தல்; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக அல்லாதிருக்கின்றதும் மற்றும் இச்சட்டத்தின் குறிக் கோள்களை எய்துவதற்கு உசிதமாக உள்ளதுமான அத்தகைய வேறு எல்லாச் செயல்களும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டு நெறிகளுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், அத்தகைய இணங்கியொழுகாமைக்கான காரணங்களை அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அமைச்சர் கொடுக்கப்பட்ட காரணங்களுடன் திருப்திப்படின், அமைச்சர் இணங்கியொழுகுவதற்கான காலப்பகுதியை நீடிக்கலாம்.

(3) அமைச்சரினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நீடிக்கப்பட்ட காலப்பகுதியினுள் இணங்கியொழுகப்பட்டிருக்காதவிடத்து, அமைச்சர் அமைச்ச ரவைக்கு அத்தகைய இணங்கியொழுகாமை தொடர்பில் அறிக்கையிடலாம்.

பாகம் I

**பால்நிலைசார் சமத்துவப் பேரவையினைத் தாபித்தல்**

பால்நிலைசார் சமத்துவப் பேரவையினைத் தாபித்தல்

**5.** (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பால்நிலைசார் சமத்துவப் பேரவை என அழைக்கப் படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**பேரவையினை அமைப்பு**

**6.** (1) பேரவையானது பின்வருவோரைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்-

(அ) ஐந்து பதவிவழி உறுப்பினர்கள் அதாவது –

(i) பெண்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவ்வமைச்சரின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்கு குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(ii) நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவ்வமைச்சரின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்கு குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(iii) கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவ்வமைச்சரின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்கு குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி; அத்துடன்

(iv) இளைஞர் அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவ்வமைச்சரின் மேலதிக செயலாளர் ஒருவரின் பதவி

வரிசைக்கு குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(v) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது பிரதிப் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி ஒருவரின் பதவிவரிசைக்கு குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் நான்கு உறுப்பினர்கள்-

(i) பால்நிலைசார் கற்கைகள் மற்றும் சுகாதார கற்கைகள் ஆகிய துறைகளில் கீர்த்தி எய்திய ஆட்களிடையேயிருந்து இரண்டு ஆட்கள்; அத்துடன்

(ii) மனித உரிமைகள் அல்லது சமூக வலுவூட்டல் ஆகிய துறையில் கீர்த்தி எய்திய ஆட்களிடையேயிருந்து இரண்டு ஆட்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் செய்யப்பட்ட நியமனம் பால்நிலைசார் சமத்துவத்தை பிரதிபலித்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சர் முயற்சித்தல் வேண்டும்.

**7.** பேரவையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் இருத்தல் வேண்டும்-

பேரவையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

(அ) பால்நிலைசார் சமத்துவத்தை மேம்படுத்தல், பாதுகாத்தல், தரமுயர்த்துதல் மற்றும் முன்னேற்றுதல் மீதும் மற்றும் பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் மீதான தேசிய கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்காக ஒருங்கிணைந்த பொறிமுறைமையை கொண்டிருப்பது மீதும் வழிமுறைகளை அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல்;

(ஆ) பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்களினது வலுவூட்டல் கண்ணோட்டம் ஒன்றிலிருந்து பெண்கள் மீது தாக்கத்தை கொண்டிருக்கக்கூடிய சட்டமன்றம் முன்னர் முடிவுறாத சட்டமூலத்தை நுனித்தாராய்தல்;

(இ) இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுகின்றதான ஒழுங்கு விதிகள் மற்றும் பணிப்புரைகளை வகுத்தமைப்பது பற்றி அமைச்சருக்கு மதியுரையளித்தல்;

(ஈ) பால்நிலைசார் சமத்துவத்திற்கான உரிமையை இயைபான பகிரங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடனான கலந்தாலோசனையுடன் அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை வழங்குதலும் அத்தகைய வேறு எல்லா வழிமுறைகளை எடுத்தலும்; முன்னெடுத்துச் செல்லல் மற்றும் பாதுகாத்தலை மேம்படுத்துவதற்கு மேம்படுத்துதல் அதனை முன்னேற்றுவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தல்;

(உ) பால்நிலைசார் சமத்துவத்தினை மேம்படுத்துவதற்காக, பாதுகாப்பதற்காக மற்றும் முன்னேற்றுவதற்காக திட்டங்களை ஆரம்பித்தலும் நடைமுறைப்படுத்தலும்;

(ஊ) பால்நிலைசார் சமத்துவமின்மைக்கான பிரதான காரணங்களை அடையாளங்காணுதலும் அதனைத் தடுப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் பயனுள்ள வழிமுறைகளை மேம்படுத்துதலுல்;

(எ) பால்நிலைசார் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பிரதான மயப்படுத்துவதற்கும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பில் சபாநாயகரால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத்தில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் குழுவிற்கான பிரதி ஒன்றுடன் சேர்த்து அமைச்சருக்கு அறிக்கையிடுதல்;

(ஏ) பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டல் மீதான தேசிய கொள்கையை நடைமுறைப்

படுத்துவதற்கான சிறந்த வழிமுறைகளை எடுப்பதற்காக பகிரங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிற்கு அவசியமான ஆதரவை வழங்குதல்;

(ஐ) பந்தி (ஏ) இன்கீழ் பால்நிலைசார் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் மீதான தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பகிரங்க மற்றும் தனியார் நிறுவனங்களை மதிப்பீடு செய்தல்;

(ஒ) சமூகத்திலும் வேலைத்தளங்களிலும் பால்நிலைசார் சமத்துவத்தை மேம்படுத்துகின்ற நோக்கத்திற்காக பால்நிலையை பிரதானப்படுத்துவதும் எண்ணிம மயப்படுத்துவதும் உட்பட ஆராய்ச்சி, கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேறு வழிமுறைகளை பொறுப்பேற்றல்;

(ஓ) அரச அலுவலர்கள் மற்றும் பொதுமக்களிற்கு பால்நிலைசார் சமத்துவம் பற்றிய பருவகால விழிப்புணர்வு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல்;

(ஔ) பால்நிலைசார் தொடர்புபட்ட விடங்கள் மீதான விழிப்புணர்வு, கல்வி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றை மேம்படுத்துதல்;

(க) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வருடாந்த வேலைத்திட்டத்தை விருத்தி செய்தல்;

(ங) வருடாந்த வேலைத்திட்டத்திற்கும் ஏற்ப வருடாந்த முன்னேற்றத்தை மீள்பரிசீலனை செய்தல் அத்துடன் பால்நிலைசார் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக உடனடிக் கவனத்தை எடுப்பதற்கு இயைபான அமைச்சருக்கு அறிக்கை இடவேண்டிய அமைச்சருக்கு அறிக்கையிடுதல்; அத்துடன்

(ச) எல்லா அல்லது எவையேனும் பணிகளை நிறைவேற்று வதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்கள் அல்லது கருமங்களைச் செய்தல்;

உறுப்பினர்களின் பதவிக்காலம்

**8.** பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரது இறப்பின்மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, தொடர்ச்சியாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி மேலும் ஒரு காலப்பகுதிக்கு மேற்படாமல் மீள்நியமனஞ்செய்வதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

பேரவையின் தவிசாளர்

**9.** (1) பால்நிலைசார் சமத்துவத்தில் சிறந்துவிளங்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை பேரவையின் தவிசாளராக அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை அமைச்சரினால் அது ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) அமைச்சர் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரை தவிசாளர் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம் பேரவையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளரானவர், சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையிலில்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக தனது பதவிக்குரிய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்ற விடத்து, அமைச்சர் வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை, உறுப்பினரொருவராக அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தவிசாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

**10.** ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் பேரவையின் உறுப்பிரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந் திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும், அத்தகைய ஆள் –

*பேரவையின் உறுப்பின ரொருவராக நியமிக்கப் படுவதற்கு அல்லது தொடர்ந் திருப்பதற்கான தகைமை யீனங்கள்*

(அ) பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லா தொழிந்தால்;

(இ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிமன்றமொன்றினால் கடனிறுக்கவகையற்றவராக விருந்தால் அல்லது கடனிறுக்கவகையற்றவர் என தீர்ப் பளிக்கப்பட்டிருந்தால்;

(ஈ) சுகயீனம் காரணமாக அல்லது வேறு மனம் அல்லது உடல் பலவீனம் காரணமாக பதவியில் தொடர்ந் திருப்பதற்கு பொருத்தமற்றவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(உ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவராக இருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(ஊ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப் பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்; அல்லது

(எ) அவர் எந்த முன்னைய காலப்பகுதியில் பேரவையின் உறுப்பினராக ஒருவராக நியமிக்கப்பட்டிருந்தாரோ அந்த முன்னைய காலப்பகுதியின்போது பதவியி லிருந்து அகற்றப்பட்டிருந்தால்.

உறுப்பினர்களை பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் பதவிவிலகுகை

**11.** (1) பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்டதும் அப்பொருள் பட்டதுமான கடிதமொன்றின்மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகையானது எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்

(2) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம், உடற்குதியீனம் அல்லது இலங்கையிலில்லாமை காரணமாக அவரது பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறொரு ஆளை நியமிக்கலாம்.

(3) அமைச்சர் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பேரவையின் உறுப்பினரொருவராக மீள நியமிப்பதற்கு அல்லது வேறு ஏதேனும் தன்மையில் பேரவைக்கு சேவையாற்றுவதற்கு தகவுடையவராதல் ஆகாது.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இருக்கின்றவிடத்து, பதவிவிலகுகின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து, அமைச்சர் 6 ஆம் பிரிவினைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் வேறொரு ஆளை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தலும் வேண்டும்.

பேரவையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

**12.** (1) பேரவையின் கூட்டம் குறைந்தது ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவையாவது நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் பேரவையின் கூட்டம் ஒன்றிற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் ஆதல் வேண்டும்.

(2) தவிசாளர், பேரவையின் கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் வருகை தராதிருப்பின், சமூகமளித்துள்ள உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கு என சமூகமாயிருந்த உறுப்பினர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) பேரவையின் கூட்டம் ஒன்று, ஒன்றில் -

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடம், தேதி மற்றும் நேரத்தில் ஒன்றுகூடி கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் நடாத்தப்படலாம்.

(ஆ) எந்த கட்புல, செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள்மூலம் பங்குபற்றுகின்றவர்களும் கூட்ட நடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்றவர்களான எல்லா உறுப்பினர்களும் கூட்டத்தின் போது ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரை ஒரேநேரத்தில் பார்க்கவும் கேட்கவும் முடியுமோ அந்த கட்புல செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் நடாத்தப்படலாம்.

(4) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபொன்றுக்கான எல்லா கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில் தவிசாளர் அவருடைய வாக்கிற்கு மேலதிகமாக உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை பேரவை ஒழுங்குபடுத்தலாம்.

உறுப்பினர்களின் ஊதியம்

**13.** பேரவையின் உறுப்பினர்களின் சம்பளங்கள் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

**14.** பேரவையினால் ஏதேனும் விடயத்தின் மீது எடுக்கப்படவுள்ள ஏதேனும் முடிபில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறை கொண்டுள்ள உறுப்பினர் ஒருவர், அத்தகைய முடிபு, பேரவையின் எந்தக் கூட்டத்தில் எடுக்கப்படுகின்றதோ அந்தக் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையினை வெளிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகையானது பேரவைக் கூட்டங்களின் நிகழ்ச்சி குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய உறுப்பினர் அவ்விடயம் தொடர்பாக பேரவையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதல் ஆகாது என்பதுடன் அத்தகைய கலந்தாராய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அத்தகைய கூட்டத்தில் சமூகமாயிருத்தலும் ஆகாது.

உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிவிடுதல்

**15.** பேரவையின் வழக்கு நடவடிக்கை, செயல் அல்லது முடிபு எதுவும் அதனது உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணத்தினால் மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் பாதிப்பு இருப்பதன் காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

வழக்கு நடவடிக்கை செயல் அல்லது முடிபு வெற்றிடமொன்று இருப்பதன் காரணத்தினால் செல்லுபடியற்றதாகாது

பாகம் II

## பால்நிலைசார் சமத்துவப் பேரவையின் பணியாட்டொகுதியினர்

**16.** (1) பேரவையானது அதனது பணிகளை முறையாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அவசியமானதாக கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான அலுவலர்களையும் ஊழியர்களையும் பேரவை நியமிக்கலாம்.

பேரவையின் பணியாட் டொகுதியினர்

(2) பேரவையானது —

(அ) காலத்திற்குக்காலம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டம் மற்றும் எவையேனும் வழிகாட்டுநெறிகளுக்கமைய தொழில் நியதிகள் மற்றும்

நிபந்தனைகள் மற்றும் ஆட்சேர்ப்பு திட்டங்கள் உட்பட அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனங்கள் அல்லது சம்பளங்கள் அல்லது வேறு ஊதியங்களை நிர்ணயிக்கலாம்;

(ஆ) பேரவையின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களை பதவியிலிருந்து நீக்கலாம்; அத்துடன்

(இ) இயைபான எழுத்திலான சட்டத்திற்கமைய, பேரவையின் அலுவலர்களின் மற்றும் ஊழியர்களின் நன்மைக்காக சேமலாப நிதியம் மற்றும் வேறு ஏதேனும் நலன்புரி மற்றும் பாதுகாப்புத் திட்டங்களையும் தாபிக்கலாமென்பதுடன் என்பதுடன், ஒழுங்கு படுத்தலாம்; அத்துடன் அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது திட்டத்திற்கு பங்களிப்புகளையும் செய்யலாம்.

(3) பேரவையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அவ்வலுவலரினதும், பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் அத்தகைய அலுவலரின் நியமிக்கும் அதிகாரியினது சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஏதேனும் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனும் ஆளை பேரவை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் பேரவையுடனான ஏதேனும் சேவைக்காலப்பகுதி அத்தகைய ஒப்பந்தத்தின்கீழான அவருடைய கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) பேரவையின் வினைத்திறனான தொழிற்பாட்டிற்கு தேவைப்படும் அளவிற்கு அதனதும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எதனையும் பேரவைக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு பேரவையானது கையளிக்கலாமென்பதுடன் எவ்வாளுக்கு அத்தகைய தத்துவங்கள் அவ்வாறு கையளிக்கப்படுகின்றதோ அவ்வாள் பேரவையின் பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கமைய அத்தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும். இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பானது பேரவையினால் மீளப் பெறப்படலாம்.

## பாகம் III

## பால்நிலைசார் நோக்குநர்

பால்நிலைசார் நோக்குநர்

**17.** (1) ஒவ்வொரு பகிரங்க நிறுவனமும் தனியார் நிறுவனமும் (இதனகத்துப்பின்னர் "பால்நிலைசார் நோக்குநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பால்நிலைசார் பிரதானமயமாக்குதல் மற்றும் பால்நிலைசார் சமத்துவத்துக்கு இயைபான அடையாளங் காண்பதற்கான மற்றும் அறிக்கையிடலுக்கு பொறுப்பான ஆளொருவர் அதன் பணியாட்டொகுதிகளுக்கிடையிலிருந்து நியமித்தல் அல்லது பெயர்குறித்தல் வேண்டும்.

(2) பால்நிலைசார் நோக்குநர் பால்நிலைசார் பிரச்சினைகளுக்கு நிவாரணமளித்தல் தொடர்பில் மேலதிக செயலாளர் பதவிக்கு அல்லது உரிய நிறுவனத்தின் தலைமைக்கான மேலதிக அல்லது பிரதி எனும் பதவிக்கு குறையாத பதவியொன்றை வகிக்கின்ற அலுவலரொருவராகவிருத்தல் வேண்டும்மென்பதுடன் நிறுவனத்தின் பிரதான தொடர்பு கொள்ளுநர் ஒருவராக விருத்தலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு பால்நிலைசார் நோக்குநரும் அவரின் பொறுப்புடைமை பற்றிய துறைகளில் இலக்கைக்கொண்டு செயற்பாடுகள் பற்றிய திட்டமொன்றைத் தயாரித்தலும், பாராளுமன்றத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்துக்கு பிரதியுடன் காலாண்டு அடிப்படையில் பேரவைக்கு நேரடியாக அறிக்கையிடுதலும் வேண்டும்

பால்நிலைசார் நோக்குநரின் பணிகள்

**18.** ஒவ்வொரு பால்நிலைசார் நோக்குநரும் பின்வருமாறு அவரது உரிய பகிரங்க நிறுவனத்தினுள்-

(அ) பால்நிலைசார் சமத்துவ அடிப்படையிலான கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை நடைமுறைப் படுத்துதலை மேம்படுத்தல் வேண்டும்;

(ஆ) நிகழ்ச்சித்திட்டங்களில் பால்நிலைசார் சமத்துவப் விடயங்களை பிரதானமயமாக்குதலுக்காக பொறுப்பாக விருத்தல் வேண்டும்;

(இ) பால்நிலைசார் சமத்துவத்தை எய்துவதுடன் இணைந்திருப்பதற்கு கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் பரிசீலனை செய்வதற்கும் திருத்து வதற்கும் பேரவைக்கு விதப்புரை செய்தல் வேண்டு மென்பதுடன் பால்நிலைசார் வரவுசெலவுத் திட்ட கோட்பாடுகளுக்கிணங்க பால்நிலைசார் பிரதான மயமாக்குதலை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) பால்நிலைசார் அடிப்படையிலான பாரபட்சம் அல்லது மீறுகை இடம்பெறுதலைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், முறைமைகள் மற்றும்

வழிமுறைகளை ஒழுங்குசெய்தலும் நடைமுறைப் படுத்துதல் வேண்டும்;

(உ) பால்நிலைசார் சமத்துவ நோக்கெல்லையிலிருந்தும் பால்நிலைசார் வரவுசெலவுத்திட்ட கோட்பாடுகளுக்கிணங்கவும் நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்துகைமீதான பின்தொடர் நடவடிக்கைகள், பகுப்பாய்வுகள் மற்றும் கணக்காய்வுகளை நடாத்துதல் வேண்டும்;

(ஊ) முடிவு எடுக்கும் செயல்முறையில் பால்நிலைசார் சமநிலையை மேம்படுத்துவதற்கு முயற்சியெடுத்தல் வேண்டும்;

(எ) வேலையிடத்தில் பாலியற் தொல்லை தொடர்பில் விசாரணைகளில் பால்நிலைசார் சமத்துவம் மீதான வழிகாட்டுநெறிகளுக்கு அமைந்தொழுகுதலை மேம்படுத்துதல் வேண்டும்;

(ஏ) தொல்லை மற்றும் வன்முறையற்ற சூழலொன்றை உருவாக்குதலும் தோதான பின்தொடர் நடவடிக்கை பொறிமுறைகளை தாபித்தலும் வேண்டும்;

(ஐ) பால்நிலைசார் அடிப்படையிலான மீறுகை அல்லது ஓரங்காட்டுகையினால் பாதிக்கப்பட்ட தனியாட்களுக்கு ஆலோசனை சேவைகளுக்கும் சுகாதாரக் கவனிப்பு சேவைகளுக்குமான அணுகுகையை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஒ) ஆண்டிறுதி வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு பேரவைக்கு ஆதரவளித்தல் வேண்டும்.

## பாகம் IV

### நிதி

பேரவையின் நிதியம்

**19.** (1) பேரவையானது (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பேரவையின் பயன்பாட்டுக்காக பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் பேரவையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையிலுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து வருமானம், கட்டளைகள், விதிப்பனவுகள், மானியக்கொடைகள், கொடைகள், அல்லது நன்கொடைகள் என்ற வகையாக பேரவையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், பேரவையானது பேரவைக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின்கீழ் பேரவையின் தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும், நிறைவேற்றுவதிலிரும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

பேரவையானது கணக்குகளைப் பேணுதல்

**20.** பேரவையானது, அது தோதானதென கருதுகின்றவாறு ஏதேனும் அரச வங்கியுடனான எவையேனும் கணக்குகளை திறக்கலாமென்பதுடன் பேணலாம். அத்துடன் அத்தகைய கணக்குகள் பகிரங்க கூட்டுத்தாபனங்களின் நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அரசாங்கத்தில் நிலவும் நிதிசார் ஒழுங்குவிதிகளுக்கிணங்க தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**21.** (1) பேரவையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பேரவையானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றி முறையான கணக்குகள் பற்றிய புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவையின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

வருடாந்த அறிக்கை

**22.** (1) பேரவையானது, ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலிருந்து ஆறுமாதங்களினுள் அந்நிதியாண்டின்போது பேரவையினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கையொன்றை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வறிக்கையுடன் இணைக்கப்படவேண்டிய அவ்வாண்டு தொடர்பான பின்வரும் ஆவணங்களின் பிரதி ஒன்றையும் வைத்திருக்கச் செய்வித்தலும் வேண்டும்:–

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து அவ்வாண்டிற்கான பேரவையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்; அத்துடன்

(ஆ) எந்த ஆண்டிற்கு அத்தகைய அறிக்கை மற்றும் கணக்குகள் தொடர்புபடுகின்றதோ அந்த ஆண்டிற்கு உடனடியாக செய்யவேண்டிய முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கை ஒன்று.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் ஆவணங்கள், அத்தகைய அறிக்கை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

இரகசியத்தின் வெளிப் படுத்துகை

**23.** பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் மற்றும் பேரவையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் கடமைகளை ஏற்பதற்கு முன்னர் இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்கள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் அவரது அறிவுக்கு எட்டியுள்ள பேரவையின் அலுவல்களுடன் தொடர்புபட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் கடுமையான இரகசியத்தன்மையை கடைப்பிடிப்பதற்கு வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகை ஒன்றை கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் சூழ்நிலைகள் தவிர, அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் அத்தகைய ஏதேனும் விடயங்கள் வெளிப்படுத்தாது அவரே வாக்குறுதியளித்தல் வேண்டும்-

(அ) சட்ட நீதிமன்றம் ஒன்றில் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்துகின்றபோது; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தத்துவங்கள் மற்றும் பணிகளை பிரயோகித்தல் அல்லது புரிதல் நோக்கத்துக்காக.

பேரவையின் தத்துவங்களைக் கையளித்தல்

**24.** (1) பேரவையானது எழுத்திலும் மற்றும் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் அதனது தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் பேரவையின் தவிசாளருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய எவரேனும் அலுவலர் பேரவையின் பெயரிலும் அதன் சார்பிலும் அத்தகைய தத்துவங்கள் அல்லது பணிகளை பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும் அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியை பிரயோகிக்கலாம் புரியலாம் அல்லது நிறைவேற்றலாமென்பதுடன் எந்நேரத்திலும் அத்தகைய ஏதேனும் கையளிப்பை இல்லா தொழிக்கலாம்.

**25.** (அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற; அல்லது *தவறுகள்*

(ஆ) பேரவையின் கட்டளையுடன் அல்லது பணிப்புரையுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற;

எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

**26.** ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்ட இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறொன்றின் விடயத்தில், அப்போது — *ஆட்கள் குழுவொன்றி லான தவறுகள்*

(அ) அத்தகைய ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாவிருக்குமிடத்து, அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் செயலாளரும் மற்றும் அலுவலரும்; அத்துடன்

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமமொன்றாக இருக்குமிடத்து, அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

விடயத்துக்கேற்ப, அத்தவறு பணிப்பாளர், செயலாளர், அலுவலர் அல்லது பங்காளர் ஆகியோரை அறியாமல் புரியப்பட்டுள்ள தெனவும் அத்தகைய தவறு புரியப்படுவதனை தடுப்பதற்கு உரிய

எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தார் என அத்தகைய பணிப்பாளர், செயலாளர் அல்லது பங்காளர் ஆகியோர் எண்பித்திருந்தாலொழிய அத்தவறொன்றுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

ஒழுங்கு விதிகள்

**27.** (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) (அ) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதன்பின்னர் மூன்று மாதங்களினுள் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப் படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னரே ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதாக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று இல்லாதாக்கப்பட்டதாக கருதப்பட்ட தேதிபற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இச்சட்டம் மேலோங்கும்

**28.** அப்போதைக்கு அமுலிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள முரண்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பால்நிலைசார் சமத்துவத்தினை எய்துதல் மற்றும் அதிகரித்தல் தொடர்பிலான எல்லாக் கருமங்கள்

தொடர்பில் பயனுறுதாதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின் மற்றும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் அல்லது அவற்றுக்கிடையில் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்குதல் வேண்டும்.

**29.** சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி — பொருள் கோடல்

"ஓரங்காட்டுகை" என்பது, தனியாள் ஒருவரின் அல்லது மக்கள் குழு ஒன்றின் இனம், சாதி, நிறம், பால், பால்நிலைசார் அடையாளம், தேசியம், மொழி, சமயம், வயது, திருமணநிலை, பெற்றோர் நிலை, இயலாமை அல்லது உடற்சுகாதார அந்தஸ்து என்பன உள்ளடங்கலாக குறித்த பண்புகளின் அடிப்படையில் அவரின் அல்லது மக்கள் குழுவின் பாகுபாடான நடாத்துகை என்று பொருளாகும்;

"நேரடியான ஓரங்காட்டுகை" என்பது, பால் அல்லது பால்நிலைகள் அடையாளம் பற்றிய ஏதுக்களின்மீதான அடிப்படையில் வெளிப்படையான பாகுபாடான நடாத்துகை என்று பொருளாகும்;

"பால்நிலைசார் அடையாளம்" என்பது, பெண்களும் ஆண்களும் எந்தக் கலாசார, பொருளாதார, சமூக மற்றும் அரசியற் பண்புகள், வகிபங்கு மற்றும் வாய்ப்புக்களினூடாக சமூகரீதியில் வகுத்தமைக்கப்பட்டு பெறுமதி மதிக்கப்படுகின்றனரோ அந்தக் கலாசார, பொருளாதார, சமூக மற்றும் அரசியற் பண்புகள், வகிபங்கு மற்றும் வாய்ப்புக்கள் என்று பொருளாகும்;

"பால்நிலைசார் அடிப்படையிலான ஓரங்காட்டுகை" என்பது, அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் அல்லது வேறேதேனும் துறையில் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் ஆட்களுக்கிடையிலான சமத்துவம் என்ற அடிப்படையின்மீது ஏற்றங்கீகரிப் பதனைப் பாதிக்கின்ற அல்லது வெற்றானதாக்குகின்ற பயனை அல்லது நோக்கத்தைக் கொண்டுள்ள பால் அல்லது பால்நிலைசார் அடையாளம் என்ற

அடிப்படையின் மீது செய்யப்பட்ட ஏதேனும் வேறுபிரித்துக்காட்டுகை, தவிர்ப்பு அல்லது மட்டுப்பாடு என்று பொருளாகும்;

"பால்நிலைசார் வரவுசெலவுத்திட்ட தயாரிப்பு" என்பது, பால்நிலைசார் சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கென வரவுசெலவுத்திட்டச் செய்முறையிலான எல்லா மட்டங்களிலும் ஒரு பால்நிலைசார் எதிர்நோக்கை உள்ளடக்குகின்றதும் அரசிறைகளையும் செலவினங்களையும் மீளக்கட்டமைக்கின்றதுமான வரவுசெலவுத் திட்டங்களின் பால்நிலைசார் அடிப்படையிலான மதிப்பீடு என்று பொருளாகின்ற வரவுசெலவுத்திட்டச் செய்முறையிலான பால்நிலையை பிரதானமயப்படுத்துவதன் பிரயோகமாகும்;

"பால்நிலைசார் சமத்துவம்" என்பது, பால்நிலைசார் அடிப்படையிலான ஓரங்காட்டுகையின்றி; வெவ்வேறு பால்நிலை மற்றும் பால்நிலைசார் அடையாளம் என்பவற்றைக்கொண்ட ஆட்களுக்கிடையிலான சமத்துவம் என்று பொருளாகுமென்பதுடன் பின்வருவனவற்றுக்கான அனுபவிப்பதற்கான சமவாய்ப்பையும் அல்லது சமஅணுக்கத்தையும் உள்ளடக்கும்:-

(அ) கல்வி;

(ஆ) தொழில்;

(இ) சுகாதாரக் கவனிப்பும் சுகாதார கவனிப்புத் தகவலும்;

(ஈ) தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்வு;

(உ) நீதி மற்றும் பிணக்குத்தீர்வு;

(ஊ) பொதுஇடங்களும் கட்டிடங்களும்;

(எ) பொதுச்சேவைகள்;

(ஏ) ஊடக, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்கள்;

(ஐ) வன்முறையிலிருந்து பாதுகாத்தல்; அத்துடன்

(ஒ) பொருளாதார, அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடுகள்.

"பால்நிலை பிரதானமயப்படுத்தல்" என்பது, எல்லாத் துறைகளிலும் எல்லா மட்டங்களிலும், சட்டவாக்கம், கொள்கைகள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட, ஏதேனும் திட்டமிடப்பட்ட நடவடிக்கை பற்றிய வெவ்வேறு பால், பால்நிலை மற்றும் பால்நிலைசார் அடையாளத்தைக்கொண்ட ஆட்களுக்கான சிக்கல்களை மதிப்பிடுவதற்கான செயல்முறை என்று பொருளாகும்;

"நேரடியாகவல்லாத ஓரங்காட்டுகை" என்பது, ஒரு சட்டம், கொள்கை, நிகழ்ச்சித்திட்டம் அல்லது செயல்முறை வெவ்வேறு பால்நிலைசார் அல்லது பால்நிலைசார் அடையாளத்தைக்கொண்ட ஆட்கள் தொடர்பானதாக இருக்குமளவுக்கு அது நடுநிலையானதாக இருப்பதாகத் தோன்றும்போது இடம்பெறுகின்ற ஓரங்காட்டுகை என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, இச்சட்டத்தின் நடைமுறைப்படுத்துகை எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது என்று பொருளாகும்;

"பகிரங்க" கூட்டுத்தாபனம்" என்பது, அரசாங்கத்தினால் பகுதியளவில் அல்லது முழுமையாக வழங்கப்பட்ட நிதிகள் அல்லது மூலதனத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற

ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு அமைப்பு என்று பொருளாகும்;

"பகிரங்க நிறுவனம்" என்பது, அரசாங்கத்தின் திணைக்களம், அல்லது நிறுவனமொன்று, பகிரங்க கூட்டுத்தாபன மொன்று அல்லது நியதிச்சட்ட நிறுவனமொன்று எனப் பொருள்கொள்ளப்படுவதுடன் அரசாங்கத்தினால் பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் அல்லது நியதிச்சட்ட குழுவொன்றினால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்று, பல்கலைக்கழகமொன்று மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் அல்லது தொழில்நுட்பக் கல்வியை முனைவுசெய்கின்ற உயர்தொழில்சார் நிறுவனம் மற்றும் நிறுவனமொன்றையும் உள்ளடக்குகின்றது.

"தனியார் நிறுவனம்" என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட, ஏற்றங்கீகரிக்கப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்ட நிறுவனமொன்றென பொருள்கொள்ளப்படுவதுடன் அரசாங்கத்தினால் முழுமையாக நிதியளிக்கப்படுபவை தவிர்ந்த ஒரு பல்கலைக்கழகம் மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் அல்லது தொழில்நுட்ப கல்வியை முனைவுசெய்கின்ற உயர்தொழில்சார் கல்வி நிறுவன மொன்று, மற்றும் நிறுவனமொன்றை உள்ளடக்குகின்றது.

**30.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்